# நிதித் துஷ்பிரயோகத்தைத் தவிர்க்க முதியவர்களுக்கு உதவுதல்



## முதியோர் நிதித் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நிதித் துஷ்பிரயோகம், மோசடிகள், ஏமாற்றல்கள் முதலியவை ஏற்படும் ஆபத்துள்ளதை நாம் அறிவோம். இதுதான் முதியோர் நிதித்  ஷ்பிரயோகம் எனப்படுகிறது. நிதித் துஷ்பிரயோகம் ஆனது,ஒருவரின் நிதிகள் அல்லது சொத்துகளை அவருடன் உறவுள்ள இன்னொருவர் சட்டவிரோதமாக அல்லது முறைகேடாகப் பாவிப்பதுடன் சம்பந்தப்படும்.இந்த வடிவத்திலுள்ள துஷ்பிரயோகம் பல வடிவங்களை எடுக்கலாம் மற்றும் இது நீங்கள் நினைத்திருந்திருக்கக் கூடியதை விட மிகவும் இளமையில் ஆரம்பித்தே எவருக்கும் நேர்ந்திருக்க முடியும்.

## முதியோர் நிதித் துஷ்பிரயோகத்தின் பொதுவான வடிவங்கள்

முதியோர் நிதித் துஷ்பிரயோகம் பல வடிவங்களை எடுக்கலாம், இதில் திரும்பத்திரும்ப அல்லது ஒரு முறை மட்டும் செய்யும் செயல்கள், அச்சுறுத்தல்கள் அடங்கலாம் அல்லது இவ்வாறான செயல்கள் எதுவும் இல்லாமல் இருக்கலாம்.
துஷ்பிரயோகத்தின் மிகப் பொதுவான வகைகள் சில இங்கு கொடுக்கப்பட்டுள்ளன:

**அதிகாரப் பத்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல்**

அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் (உங்களுடைய சட்டத்தரணி) உங்களுடைய பணத்தை அல்லது சொத்துகளைத் தமக்காக எடுத்துக்கொள்ளும்போது இது நடக்கலாம்.



**அழுத்தம், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்.**

உங்களுடைய உயிலில் உங்களுடைய சொத்துகள் அல்லது கோரிக்கைகள் இருக்க வேண்டுமென்பதற்காக, கையொப்பமிடுமாறு உங்களை ஒருவர் வற்புறுத்தும்போது இது நடக்கிறது.



**ஏமாற்றல் மற்றும் மோசடிகள்**

உங்களுடைய பணத்தைக் களவெடுக்கும் நோக்கத்தில் வேண்டுமென்றே உங்கள் நம்பிக்கையைப் பெற ஒருவர் முயற்சிக்கும்போது இவை நடக்கின்றன.



**குடும்ப ஒப்பந்தங்களைத் துஷ்பிரயோகம் செய்தல்**

குடும்பத்தினருடன் பணம் அல்லது சொத்து பற்றி நீங்கள் மேற்கொண்டிருக்கும் ஏதேனும் முறைசாரா ஒப்பந்தங்களை அவர்கள் தமக்கு ஆதாயமாகக் கொள்ளும்போது இது ஏற்படும்.



**நிதிகளின் முறைதவறிய பாவனை**

உங்களுடைய பணத்தை அணுக நீங்கள் அனுமதித்துள்ள ஒருவர், ஒப்புக்கொண்டதை விட வித்தியாசமான வழியில் அதைச் செலவழிக்கும்போது இது நடக்கிறது.



**உணர்ச்சிவச மிரட்டிப்பறிப்பு**

கடன் தராவிட்டால், பேரப்பிள்ளைகளைப் பார்க்க முடியாது போன்ற சில அச்சுறுத்தல்களை மேற்கொண்டு ஒருவர் நிதி ஆதாயத்தைப் பெறும்போது இது நடக்கிறது.



**பரம்பரையுரிமையைப் பெறுவதில் பொறுமையின்மை**

உங்களுடைய பணத்திற்கும் சொத்துகளுக்கும் தமக்கு உரிமையளிக்கப்பட்டுள்ளதாக வயது வந்தோர், குறிப்பாகக் குடும்பத்தினர் நினைக்கும்போது இது நடக்கிறது, இதனால் அது அவர்களை முயற்சிக்குமாறும், உங்களிடமிருந்து அவற்றை எடுக்குமாறும் செய்யலாம்.



**உத்தரவாதமளித்தவர்களின் தவறான நடத்தை**

சிலவேளைகளில், கெட்ட எண்ணம் எதுவும் இல்லாத போதிலும், கடனுக்கு உத்தரவாதமளிப்பது தவறாகச் சென்றுவிடலாம், இதனால் உங்கள் வீடு அல்லது மற்றைய சொத்துகளை இழக்க நேரிடலாம்.



**வாக்குறுதியளித்த பராமரிப்பை அளிக்கத் தவறுதல்**

உங்களைப் பராமரிப்பதற்காக ஒரு குடும்ப உறுப்பினரை ஏற்பாடு செய்வது குழம்பும்போது,இது நடக்கிறது.



CommonwealthBank

## ஆபத்தில் இருப்பது யார்?



எவருக்கும் முதியோர் நிதித் துஷ்பிரயோகம் ஏற்படலாம் என்ற போதிலும், குறிப்பிட்ட சில குழுக்களுக்கு இந்த ஆபத்து அதிகமுள்ளது. இதில் அடங்குபவர்கள்:

- தனியாக அல்லது தனிப்படுத்தப்பட்டு இருப்பவர்கள்
- உடல் அல்லது உள நலப் பாதிப்பு ஏற்பட்டுள்ளவர்கள்
- மொழிக் குறைபாடுகள் அல்லது கலாச்சார எல்லைகள் காரணமாக, பணத்தைப் பற்றிய குறைந்த புரிந்துணர்வு உள்ளவர்கள்
- LQBTIQ+ சமூகங்களைச் சேர்ந்தவர்கள்
- தங்களுடைய பராமரிப்புக்காக மற்றவர்களைத் தங்கியிருப்பவர்கள்
- கடந்த காலத்தில் வேறு வகையான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர்கள்

**நிதித் துஷ்பிரயோகத்தை அடையாளங்காணுதல்**

இது பரந்து காணப்படுகின்ற போதிலும், முதியோர் நிதித் துஷ்பிரயோகம் பெரும்பாலும் மறைக்கப்பட்டுள்ளதால் அல்லது அடக்கப்பட்டுள்ளதால் அதை அடையாளங்கண்டு வெளிக்காட்டுவது கடினமாக இருக்கலாம்.

இந்தக் காரணங்களுக்காக, பொதுவாக நிதித் துஷ்பிரயோகத்தைப் பற்றி கதைக்கும்போது மக்கள் சங்கடப்படுவதை, முரண்படுவதை மற்றும் திணறடிக்கப்படுவதைச் சாதாரணமாக உணரலாம். நிதித் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியிருப்பவர்களுக்கு அதை அடையாளம் காணுவதும் கட்டுப்படுத்துவதும் மற்றும்/அல்லது அதைத் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் நடந்ததாக ஒப்புக்கொள்வதும் பெரும்பாலும் கடினமாக உள்ளது.

## கருத்தில் கொள்ள வேண்டிய எச்சரிக்கைக் குறிகள்:

**1.**

**எதற்காக என்ற புரிதல் இல்லாமல் பணம் எடுக்கப்பட்டிருத்தல்**



**2.**

**நீங்கள் விளங்கிக்கொள்வதை மொழித் தடைகள் கடினமாக்குகின்றன**




**3.**

**வங்கி அறிக்கைகளைத் தவறவிடுகிறீர்கள் அல்லது அவை குழப்பமாக உள்ளன**



**4.**

**யாரோ ஒருவரால் நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்படுவதாக அல்லது கட்டுப்படுத்தப்படுவதாக உணர்கிறீர்கள் மற்றும் யாரோ ஒருவர் கூறுவதைத்தான் நீங்கள் கட்டாயம் செய்ய வேண்டுமென நம்புகிறீர்கள்**



**5.**

**உங்களுடைய பணத்தில் அதிகாரமில்லாத ஒருவர், பணத்தை எடுப்பதற்காக உங்களுடன் சேர்ந்து வங்கி வரை வருகிறார்**



**6.**

**வங்கிப் படிவங்களை உங்கள் சார்பாக வேறு ஒருவர் நிரப்புகிறார்**



## முதியவர் துஷ்பிரயோகத் தொலைபேசி மையம்

உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், 1800 ELDERHelp (1800 353 374) என்ற இலக்கத்தை அழையுங்கள்.

இந்த இலக்கத்திற்கு இலவசமாகத் தொலைபேசியில் அழைக்கலாம் இது முதியோர் துஷ்பிரயோகம் சம்பந்தமான தகவல்களையும் ஆலோசனையையும் வழங்குகிறது. உங்களுடைய பகுதியில் உள்ள தொலைபேசி மையச் சேவைக்கு நீங்கள் தானாகவே திருப்பிவிடப்படுவீர்கள். இந்தத் தொலைபேசி மையமானது,மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்களுடன் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. முதியவர் துஷ்பிரயோகத் தொலைபேசி மையங்கள் என்பவை நெருக்கடி ஆதரவுச் சேவைகள் அல்ல, மேலும் அது இயங்கும் நேரங்களும் சேவைகளும் அமைவிடங்களின்படி மாறுபடும்.

உங்களுடைய நிதிகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், தயவுசெய்து உங்களுடைய வங்கிக்கு அறிவித்தாருங்கள். நீங்கள் விரும்பினால், உங்களுடைய உள்ளூர் முகாமையாளர் உங்களுடன் தனிப்பட்ட முறையில் கதைப்பார்.

முதியவர் நிதித் துஷ்பிரயோகம் மற்றும் மோசடிகள் மற்றும் ஏமாற்றல் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு கொம்பாங்க் (CommBank) இணையதளத்திலுள்ள பாதுகாப்பு மற்றும் புத்திசாலித்தனமான வழிகாட்டியை (Safe and Savvy guide) பதிவிறக்கலாம்.

குறிப்பு: இந்த ஆவணம் மற்றைய மொழிகளில் கிடைக்கிறது.

Tamil